**மதுக்கரை நகராட்சியில் 29.07.2022ம் நாள் நடைபெற்ற அவசர மன்றக்கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்.**

**மன்றப் பொருள் எண்.01**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.ண்.17404/2022/எம்.சி.ஏ–2, நாள்.14.07.2022ல் அறிவுறுத்தியதன்படி, மதுக்கரை நகராட்சி பகுதிக்குள் செயல்படும் 1 முதல் 5ம் வகுப்பு வரை கல்வி பயிலும் கீழ்காணும் அரசு ஆரம்பபள்ளி மாணவ மாணவிகளுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை சிற்றுண்டி உணவு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | அரசு ஆரம்ப பள்ளியின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசு ஆரம்பபள்ளி, அறிவொளி நகர், மதுக்கரை | 219 |
| 2 | அரசு ஆரம்பபள்ளி, குரும்பபாளையம், மதுக்கரை | 411 |
| 3 | அரசு ஆரம்பபள்ளி, மதுக்கரை மார்க்கெட், மதுக்கரை | 250 |
| 4 | அரசு ஆரம்பபள்ளி, மரப்பாலம், மதுக்கரை | 145 |
| | **மொத்தம்** | 1025 |

மேற்காணும் விபரத்திற்கான மாணவர்களுக்கு காலை சிற்றுண்டியாக உப்புமா, கிச்சடி, பொங்கல், உள்ளிட்ட உணவு பொருட்களை கீழ்காணும் ஒருங்கிணைந்த சமையற் கூடம் அமைத்து அவ்விடத்தில் தகுதியான மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் பொறுப்பேற்று உணவு தயார் செய்து அங்கிருந்து தனி வாகனத்தின் மூலம் சம்மந்தப்பட்ட பள்ளிகளுக்கு காலை 8.00 மணிக்குள் காலை உணவுகள் கொண்டு சேர்க்கப்படவுள்ளது.

**ஒருங்கிணணைந்த சமையற்கூடம் அமையவுள்ள இடம்**

அரசு நடுநிலைப் பள்ளி,
23 வது வார்டு, ராஜேஸ்வரி நகர்,
மரப்பாலம், மதுக்கரை.
கோயம்புத்தூர் மாவட்டம்.

மேற்காணும் விபரத்திற்கு பழைய பள்ளி கட்டடத்தில் ஒருங்கிணைந்த சமையற்கூடமாக மாற்றி அமைப்பதற்கான (Old Building Renovation to Comman Kitchen Centre) செலவின மதிப்பீடு ரூ.9.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் விபரத்திற்கு மதுக்கரை நகராட்சி பகுதிக்குள் கல்வி பயிலும் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குவதற்கான ஒருங்கிணைந்த சமையற் கூடம் மாற்றி அமைப்பதற்கான செலவு ரூ.9.50/– (ரூபாய் ஒன்பது லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.809/2022/அ1)

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கு ஒருங்கிணைந்த சமையற் கூடம் மாற்றி அமைப்பதற்கான செலவின மதிப்பீடு ரூ.9.50 லட்சத்தை அரசு மான்யமாக திரும்ப பெறுவதை எதிர் நோக்கி நகராட்சி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.60</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.02**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.31117/2021/CFC, நாள். 20.06.2022 ன் படி மதுக்கரை நகராட்சிக்கு 15 வது நிதிக்குழு மான்யம் – Untied Grant 2021 –22 ஆண்டுக்கு கீழ்காணும் பொது வேலைக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பொது வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | மதுக்கரை நகராட்சிக்கு உட்பட்ட 3 வது வார்டு கலைஞர் நகர் மெயின் ரோடு Unicode 169003 R 0012 நீளம் 250 மீ அகலம் 4.50 மீட்டர் கலைஞர் நகர் முதல் குறுக்கு சாலை Unicode 16900R0013 நீளம் 180 மீ அகலம் 4.50 மீ, கலைஞர் நகர் 2 வது குறுக்கு சாலை 16900R0014 நீளம் 128 மீ அகலம் 4.50மீ ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல். | 35.22 லட்சம் |

மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தின் மண்டல செயற் பொறியளர் அவர்களின் செயல் முறைகள் ந.க.எண்.0019/2022/பி1, நாள். 01.07.2022ன்படி தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் பணியை மேற்கொள்ள தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிக்கான விதிகள் 2000 ன் படி திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணியை மேற்கொள்வதற்கும் அதற்காகும் செலவினத்தை 15 வது நிதிக் குழு மான்யத்தில் Untied Grant 2021 –22 ன் கீழ் செலவு மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.685/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.61</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.03

இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.41, நாள். 30.06.2022 ன் படி வார்டு எண். 4 வது வார்டு அறிவொளி நகர் விவேகானந்த சதுக்கம் குமார் பிரதர்ஸ் கம்பெனி முதல் ABS பிளாஸ்டிக் இண்டஸ்ட்ரியல்ஸ் பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2021–22 ம் ஆண்டிற்கு ரூ.21.00 லட்சம் மதிப்பீட்டில் மண் சாலையாக உள்ளதை தார்சாலையாக மாற்றும் பணிக்கு மன்றத்தில் அனுமதிக்கப்பட்டதற்கு கடந்த 05.07.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரார் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப் புள்ளியின் விலை | மதிப்பீட்டை விட கூடுதல்/குறை |
|---|---|---|---|
| 1 | தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ்,<br>16/137, சரஸ்வதி நகர்,<br>மரப்பாலம்,<br>மதுக்கரை. | ரூ.22,03,950/– | 4.95% கூடுதல் |
| 2 | தி/வா. மல்லையன் இன்பராஸ்டக்சர்,<br>16/173பி, பாலக்காடு மெயின் ரோடு,<br>மரப்பாலம், மதுக்கரை. | ரூ.22,26,000/– | 6.00% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட கூடுதல் விலை விகிதத்தில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ், நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை நமக்கு நாமே திட்டம் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 213/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுதிக்கலாம்.
2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மண் சாலையாக உள்ளதை தார்சாலையாக மாற்றும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ், நிறுவனத்தாருக்கு அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.62</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.04

இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.41, நாள். 30.06.2022 ன் படி இந்நகராட்சி 10 வது வார்டு GR Industrial Park பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2021–22 ம் ஆண்டிற்கு ரூ.15.00 லட்சம்

மதிப்பீட்டில் மண் சாலையாக உள்ளதை தார்சாலையாக மாற்றும் பணிக்கு மன்றத்தில் அனுமதிக்கப்பட்டதற்கு கடந்த 05.07.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப் புள்ளியின் விலை | மதிப்பீட்டை விட கூடுதல்/குறை |
|---|---|---|---|
| 1 | தி/வா. மல்லையன் இன்பராஸ்டக்சர்,<br>16/173பி, பாலக்காடு மெயின் ரோடு,<br>மரப்பாலம்,மதுக்கரை. | ரூ.15,74,400/– | 4.96% கூடுதல் |
| 2 | தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ்,<br>16/137, சரஸ்வதி நகர்,<br>மரப்பாலம்,<br>மதுக்கரை. | ரூ.15,90,000/– | 6.00% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட கூடுதல் விலை விகிதத்தில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள தி/வா. மல்லையன் இன்பராஸ்டக்சர், நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை நமக்கு நாமே திட்டம் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 213/2022/அ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மண் சாலையாக உள்ளதை தார்சாலையாக மாற்றும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/வா. மல்லையன் இன்பராஸ்டக்சர்ஸ் நிறுவனத்தாருக்கு அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்லாம்.

**<u>தீர்மானம் எண்.63</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## மன்றப் பொருள் எண்.05

அரசாணை எண்.172 சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத்துறை (சி2) நாள். 14.07.2022 மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.1235/2022/அ4, நாள்.15.07.2022 ன் படி இந்திய சுதந்திரத்தின் 75வது ஆண்டு விழாவை “சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா ” கொண்டாடும் பொருட்டு தேசிய அளவில் ஆகஸ்ட் 11 முதல் 17 வரை சுதந்திர வாரத்தில் நகரங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் அதாவது “அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி” ஏற்றி விழா கொண்டாடுவதை உறுதி செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் விபரத்திற்கு இந்நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிலும் தேசிய கொடியை ஏற்றவும் மற்றும் சமூக அளவிலான நிறுவனங்களான அங்கன்வாடிகள், சுகாதார துணை மையங்கள் கூட்டுறவுகள், துணை அஞ்சல் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து கட்டடங்களிலும் தேசிய கொடியை ஏற்றுவதற்கு அரசு திட்டங்களின் சுய உதவி குழுக்களின் செயல்பாட்டாளர்கள், ஆஷா பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் முன்களப் பணியாளர்கள் அனைத்து நகராட்சி பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து நிலை அலுவலர்களும், பணியாளர்களும் இந்நகர் பகுகளில் உள்ள அனைத்து வீடுகளிலும் தேசிய கொடியை ஏற்றுவதற்கும் பறக்க விடுவதற்கும் ஊக்குவிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.17129/2022/எம்–1, நாள்.30.06.2022 ம் நாளிட்ட கடிதத்தில் அனைத்து வீடுகளிலும் தேசிய கொடியை ஏற்றவும், ஒவ்வொரு துறைக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக முக்கிய பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அறிவுரைகளுக்கிணங்க சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவை முன்னிட்டு மதுக்கரை நகராட்சி பகுதிக்குள் உள்ள அனைத்து வீடுகளிலும் வருகிற ஆகஸ்ட் 11 முதல் 17 வரையுள்ள ஒருவார காலத்திற்கு தேசிய கொடியை ஏற்றி விடுதலைத் திருநாளை கொண்டாட தேவையான தேசிய கொடிகளை அரசு காதிகிராப்ட் நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்வதற்கும் விழிப்புணர்வு நோட்டீஸ்கள் அச்சடித்து வீடு விடாக விநியோகிப்பதற்கும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.300000/–ஐ (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.906/2022/அ1)

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.64**</u>

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.06**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.ண்.17404/2022/எம்.சி.ஏ–2,நாள்.14.07.2022 ல் அறிவுறுத்தியதன் படி, மதுக்கரை நகராட்சி பகுதிக்குள்செயல்படும் 1 முதல் 5ம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை சிற்றுண்டி உணவு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்க வார்டு எண். 23 வது வார்டு ராஜேஸ்வரி நகர் அரசு நடுநிலைப் பள்ளியில் உள்ள பழைய பள்ளி கட்டடத்தில் ஒருங்கிணைந்த சமையற் கூடம் அமைக்க ரூ.9.50 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய கடந்த 26.07.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் வருமாறு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப் புள்ளியின் விலை | மதிப்பீட்டை விட கூடுதல்/குறை |
|---|---|---|---|
| 1 | தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ், 16/137, சரஸ்வதி நகர், மரப்பாலம், மதுக்கரை. | ரூ.9,49,905/– | –0.01% குறைவு |
| 2 | திரு.மயில்சாமி அன் கோ, 14/14, மேட்டாங்காடு, மதுக்கரை மார்க்கெட்,மதுக்கரை. | ரூ.9,97,310/– | 4.98% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ், நிறுவனத்தாரின் விலை விகிதத்தினை ஏற்று வேலை உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 809/2022/அ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுதிக்கலாம்
2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி அவசர அவசியம் கருதி மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்க குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/வா. ஆர்.கே.பில்டர்ஸ், நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.65</u>

1. அனுமதிக்கப்பட்டது.
2. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.07**

இந்நகராட்சி 10வது வார்டு பாரதி காலனியில் உள்ள மேல்நிலை குடிநீர் தொட்டியிலிருந்து மெகா சிட்டி பகுதி வரை புதியதாக பிவிசி குழாய்கள் பதித்து குடிநீர் வழங்கும் பணிக்கு ரூ.6.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியை செய்வதற்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.66</u>

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.08**

இந்நகராட்சி **2**வது வார்டு அறிவொளி நகர் அண்ணா சதுக்கம் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து அப்பகுதி மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.**4.50** லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியை செய்வதற்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுதிக்கலாம்

**தீர்மானம் எண்.67**

அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப் பொருள் எண்.09**

இந்நகராட்சி **19**வது வார்டு மரப்பாலம் பாடசாலை வீதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து வார்டு எண்.**19, 20** மற்றும் **23** ஆகிய பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.**4.40** லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியை செய்வதற்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுதிக்கலாம்

**தீர்மானம் எண்.68**

அனுமதிக்கப்பட்டது.

(ஒ/ம்) நா. நூர்ஜஹான்
நகர் மன்றத்தலைவர்
மதுக்கரை நகராட்சி

இடம் : மதுக்கரை
நாள் : 29.07.2022

---

//உண்மை நகல் உத்திரவுபடி//

ஆணையாளர்
மதுக்கரை நகராட்சி